# மாகாண கல்வி அபிவிருத்திக் குழுக் கூட்டம் – II

**இடம்** : வடக்கு மாகாண கல்வி அமைச்சின் கேட்போர் கூடம்.

காலம் :- 03.03.2016 காலை 9.30 மணி

சமுகமளித்தோர்:-

- கௌரவ கல்வி அமைச்சர்
- செயலாளர், கல்வி அமைச்சு, வட மாகாணம்.
- மாகாணக் கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்வித் திணைக்களம், வட மாகாணம்.
- மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள், மா.க.திணைக்களம், வட மாகாணம்.
- வலயக் கல்விப் பணிப்பாளர்கள் (தென்மராட்சி ,தீவகம் ,முல்லைத்தீவு, துணுக்காய் , கிளிநொச்சி, வவுனியா தெற்கு,வவுனியா வடக்கு, மடு,மன்னார்)
- பாடசாலை வேலைகள் பணிப்பாளர், கல்வி அமைச்சு, வட மாகாணம்.
- பொறியியலாளர், பாடசாலை வேலைகள் பிரிவு, கல்வி அமைச்சு, வட மாகாணம்.
- பிரதம கணக்காளர் மாகாணக் கல்வித் திணைக்களம், வட மாகாணம்
- பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் ( மாகாணக் கல்வி அமைச்சு, மாகாணக் கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம், )
- உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்- மாகாணக் கல்வித் திணைக்களம்.
- நிர்வாக உத்தியோகத்தர், மாகாண கல்வி அமைச்சு
- தொழிநுட்ப உத்தியோகத்தர்கள்.

செயலாளர், கல்வி அமைச்சு அவர்கள் கூட்டத்திற்கு வருகைதந்த கௌரவ கல்வி அமைச்சரையும் மாகாண மேலதிகக் கல்விப் பணிப்பாளர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், பாடசாலை வேலைகள் பிரிவு பொறியியலாளர்கள், கணக்காளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்றுக்கொண்டு இந்த வருடத்திற்குரிய இரண்டாவது மாகாண கல்வி அபிவிருத்திக் கூட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

☞ செயலாளர் அவர்கள் உரையாற்றும் போது இது 2வது கூட்டமாகும். பேரவைக்கூட்டம் நடைபெற்ற காரணத்தினால் இக்கூட்டம் தவிர்க்கமுடியாத காரணத்தினால் இன்று நடைபெறுகின்றது. இம்மாதம் 31 ஆம் திகதி 3 வது மாகாண மட்ட கல்வி அபிவிருத்திக் குழுக்கூட்டம் நடைபெறும் எனவும் தெரிவித்தார்.

☞ அடுத்து வேலைகள் தொடர்பான முன்னேற்றங்களைப் பார்ப்போம்.

☞ இவ்வருடம் கூடியநிதி கிடைக்கப்பட்டுள்ளதால் கூடிய வேலைகள் செய்ய வேண்டும் இவ்வருடத்திற்குள் அதனைப்பயன்படுத்தி முடிக்கவேண்டும். ஒதுக்கப்படும் நிதிதொடர்பாக ஒவ்வொரு மாதமும் வேலைத்திட்ட மீளாய்வு மாதாந்தக்கூட்டத்தில் ஆராயப்படும் எனவும் மேலும் தெரிவித்தார்.

☞ இவ்வருடம் PSDG க்கு நிதி அதிகமாக ஒதுக்கப்பட்டுள்ளது, அதற்கான திட்டங்களும் அனுப்பப்பட்டு பிரதம செயலாளரால் நிதி ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்டு ஆராயப்பட்டு அனுமதியும் கிடைக்கப்பெற்றுள்ளது. மாகாணகல்வித் திணைக்களத்திற்கு 20 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதால் தங்களுடைய முன்மொழிவுகளையும் தரும் படி கோரப்பட்டது.

☞ முறைசாராக் கல்வி பயிற்சி நிலையம் அமைப்பதற்கான நிதி ஆணைக்குழுவின் அனுமதி கிடைக்கவில்லை.

☞ அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை திட்டத்தில் 4 வழிவங்களில் இனம்காணப்பட்டுள்ளது.

☞ Project A :- “அருகிலுள்ளபாடசாலை சிறந்த பாடசாலை” என ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. 63 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் அவசர வேலைக்காக 2 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. அதற்கான மதிப்பீடு தரப்படவேண்டு மென்பதற்கான அனுமதியும் வழங்கப்படும். அதற்கு அடுத்தகட்டமாக ஆய்வுகூடம் அமைப்பதற்காகவும் விடுதிகள் அமைப்பதற்காகவும் நிதி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

☞ கல்வி அமைச்சர் அவர்கள் உரையாற்றும்போது இவ்வருடம் இத்திட்டத்திற்காக பல பாடசாலைகள் முன்மொழியப்பட்டுள்ளது. எனவே இக்கூட்டத்தில் சரியான ஒதுக்கீடு தொடர்பாக ஆராயப்படவேண்டும். ஏதாவது மாற்றம் இருந்தால் மாற்றுத்திட்டம் செய்யமுடியும் எனவும் தெரிவித்தார். இம்முறையும் எல்லா வலயக்கல்விப்பணிப்பாளர்களையும் என்னால் ஒரே நேரத்தில் சந்திக்கமுடியவில்லை எனவும் தெரிவித்தார். நீங்கள் பாடசாலையில் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் செய்யாவிட்டால் தரப்பட்ட நிதியை தேவையான பாடசாலைக்கு விட்டுக் கொடுக்க முடியும் எனவும் தெரிவித்தார்.

☞ Project B :- 1AB ,1C பாடசாலைகளில் இதுவரையும் எந்தவிதமான திட்டத்திற்குள்ளும் உள்ளடக்கப்படாத பாடசாலைகளுக்கான தேவைப்பாடுகளைத் தரமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டதற்கு அமைவாக, வவு/விபுலானந்தாகல்லூரி, யா/கொக்குவில் இந்துக்கல்லூரி,யா/ மகாஜனாகல்லூரி என்பவையும் முன்மொழியப்பட்டன.

☞ Project C :- 1000 பாடசாலைகள் திட்டத்தினுள் வந்த பாடசாலைக்கு உள்ளடக்கப்பட்ட தேவை என்ன என்பது தொடர்பாக ஆராயப்பட்டது. அத்திட்டத்தினுள் பாடசாலை மாணவர்களுக்கு பயன்படக்கூடிய விவசாய அறை,விஞ்ஞான ஆய்வு கூடம் அமைத்தல் என்பவை கட்டப்படலாம்.

☞ Project D :- ஆரம்பப் பாடசாலையில் 250 மாணவர்களுக்கு அதிகமாக உள்ள மாணவர்களைக் கொண்ட பாடசாலையின் உடனடியாக இரு மாடிக்கட்டடங்கள் அமைக்கப்படல் வேண்டும்.

☞ இது தொடர்பாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் (ஆரம்பக்கல்வி) உரையாற்றும்போது தரம் iii பாடசாலைகள் மட்டும் தான் இதற்குள் உள்ளடக்கப்படவேண்டும் எனவும் கீழ் தளத்தில் Profile room, செயற்பாட்டறை என்பனவும், மேலே வகுப்பறையுமாக அமைக்கப்படவேண்டும் எனவும் தெரிவித்தார்.

☞ இவை தொடர்பாக மேலும் ஆராயப்பட்டதற்கு அமைவாக தரப்பட்ட பாடசாலைகளில் மாற்றங்கள் செய்யப்பட்டதுடன் அச்சுவேலி ஆரம்பப்பாடசாலை மற்றும் புத்தூர் இந்து ஆரம்பப்பாடசாலை களைத் தெரிவு செய்ய முன்மொழியப்பட்டதுடன் இனிவரும் காலங்களில் நகரப்புறப்பாடசாலைகளில் ஆரம்பக்கல்வி மாணவர்களின் எண்ணிக்கை இத்திட்டத்தின் மூலம் குறைக்கப்படும் என்பதால் நகரப்பகுதியில் பாடசாலைகளில் **திருத்தங்களை** மேற்கொள்ளுமாறு அமைச்சர் தெரிவித்தார்.

☞ செயலாளர் அவர்களின் கருத்துப்படி கொழும்புத்துறை, நாவாந்துறைப்பகுதியிலுள்ள பாடசாலைகளைக் கருத்தில் கொள்ளும்படியும், தங்களால் தரப்பட்ட பாடசாலைகளைப் பார்த்து சரியான தெரிவுகளை மேற்கொண்டு தங்கள் விபரங்களைத் தரும்படி வலயக்கல்விப்பணிப்பாளர்களிடம் கேட்டுக் கொண்டார்.

☞ வலயங்கள் வரிசையில் வலிகாம வலயப்பாடசாலைகளில் சுழிபுரம் திருவடிநிலை பாடசாலையில் உள்ள 2 ஏக்கர் நிலத்தினைப் பயன்படுத்தும் படி தெரிவிக்கப்பட்டது. அத்துடன் இவ்வலயத்திலுள்ள சரியான பாடசாலைகளைத் தெரிவு செய்து தருமாறும் கோரப்பட்டது.

யா / சங்கானை சைவப்பிரகாச ஆரம்ப வித்தியாலயம் தெரிவு செய்யப்பட்டதுடன் யா/மாதகல் புனித தோமஸ் பெண்கள் பாடசாலைக்கு பதிலாக வேறு பாடசாலையைத் தெரிவு செய்யும்படி தெரிவிக்கப்பட்டது.

☞ யா/வசாவிளான் வேலுப்பிள்ளை பாடசாலையை யா/புன்னாலைக்கட்டுவன் இ.த.க.பாடசாலையில் இயங்க நடவடிக்கை எடுத்தல்

☞ வடமராட்சி வலயப்பாடசாலைகள் வரிசையில் துன்னாலை மெ.மி.த.க.பா. பாடசாலை தெரிவுசெய்யப்பட்டதுடன் வடமராட்சி கிழக்கிலுள்ள ஏதாவது பாடசாலையைத் தெரிவு செய்து தரும்படியும் செயலாளரால் தெரிவிக்கப்பட்டது.

☞ தென்மராட்சி வலயப்பாடசாலைகள் அனைத்தும்தெரிவு செய்யப்பட்டன.

☞ கிளிநொச்சி வலயப்பாடசாலைகளில் ஓலையால் வேயப்பட்ட பாடசாலைகளைக் கருத்தில் கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டதுடன் வட்டக்கச்சி ஆரம்பப்பாடசாலை, அன்னை சாரதாதேவி வித்தியாலயம்,முழங்காவில் ஆரம்ப வித்தியாலயம்,கோணவில் காந்தி வித்தியாலயம் போன்ற பாடசாலைகள் முன்மொழியப்பட்டதுடன் வலயக்கல்விப் பணிப்பாளர்கள் அதனைச் சரியாகத் தெரிவு செய்து அனுப்பும்படி மேலும் தெரிவித்தார்.

☞ முல்லைத்தீவு வலயத்தில் மூங்கிலாறு ஆரம்ப வித்தியாலயம், உடையார்கட்டு அ.த.க.பா. தெரிவு செய்யப்பட்டதுடன் அவர்களால் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளும் அனுமதிக்கப்பட்டன.

☞ துணுக்காய் வலயத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள் அனுமதிக்கப்பட்டன.

☞ மன்னார் வலயத்தில் புனித மரியாள் பெண்கள் பாடசாலை அனுமதிக்கப்பட்டவில்லை (தரம் 1 முதல் 11 வரை).

☞ மடு வலயத்தில் பெரிய பண்டிவிரிச்சான் ஆரம்ப பாடசாலை,பெரியமடு கிழக்கு அ.மு.க.பா. ஆகிய பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டன.

☞ தீவகம் :- யா / காரை ஊரி அ.மி.த.க.பா, யா / வேலணை துறையூர் ஐயனார் பாடசாலை என்பன தெரிவு செய்யப்பட்டன.

☞ வவுனியா தெற்கு, வவுனியா வடக்கு வலய பாடசாலைகளிலும் சரியான தெரிவுகளை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டது.

☞ கௌரவ கல்வி அமைச்சர் உரையாற்றும்போது அனைத்து வலயக்கல்விப்பணிப்பாளர்களும் வரையறைக்குட்பட்ட சரியான பாடசாலைகளைத் தெரிவு செய்ய வேண்டுமென கேட்டுக் கொள்கின்றேன் .அப்பொழுது தான் மாகாணசபை உறுப்பினர்களின் கேள்விகளுக்கு நான் சரியான பதிலைக் கொடுக்கமுடியுமெனத் தெரிவித்தார்.

☞ வடமாகாணத்தில் 3 இடத்தில் தொழில் நுட்பபீடம் கட்டுவதற்கான அனுமதி உண்டு. அதற்கான இடத்தினையும் தெரிவு செய்யுமாறு கோரப்பட்டதற்கு அமைவாக,

1. மடுவலயத்தில்- மன் / மடு அடம்பன் ம.ம.வி

2.வவு / புளியங்குளம் இந்துக் கல்லூரி ஆகிய இடங்களில் கட்டத் தீர்மானிக்கப்பட்டது.

☞ PSDG வேலைகள் தொடர்பாக வலயங்கள் ரீதியாக ஆராயப்பட்டன.

☞ யாழ் கல்வி வலயத்தில் :- 6 பாடசாலைகள் உள்ளதாக தெரிவிக்கப்பட்டது. யா / சென் பெனடிக்ற் வித்தியாலயத்தில் 3 மாடி அமைப்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. யா/முஸ்லிம் கதீஜா வித்தியாலயத்தில் மக்கள் இருப்பதனால் வேலைத்திட்டங்களை முன்னெடுப்பது கஷ்டமாக உள்ளதாக தொழில்நுட்ப உத்தியோகத்தரால் தெரிவிக்கப்பட்டதற்கு, இம்மக்களை குடியெழுப்புவது தொடர்பாக அரசாங்க அதிபருக்கு கடிதம் வரையுமாறு கௌரவ கல்வி அமைச்சரால் தெரிவிக்கப்பட்டது.

☞ வலிகாம வலயத்தில் எதிர்வரும் 04.03.2016 ல் மதிப்பீடு கொடுப்பதாகவும்

☞ வடமராட்சி வலயம் 05 பாடசாலைகளின் மதிப்பீடு கொடுத்துவிட்டதாகவும்

☞ தென்மராட்சியில் 02 பாடசாலைகளின் மதிப்பீடு கொடுத்துவிட்டதாகவும்

☞ கிளிநொச்சி 08 பாடசாலைகளின் மதிப்பீடு கொடுத்துவிட்டதாகவும்

☞ முல்லைத்தீவு துணுக்காய் வலயப் பாடசாலைகளின் மதிப்பீடு கொடுத்துவிட்டதாகவும்

☞ வவுனியா வடக்கு, வவுனியா தெற்கு வலய பாடசாலைகளின் மதிப்பீடு கொடுத்துவிட்டதாகவும்

☞ மன்னாரில் மதிப்பீடு அடுத்த கிழமை கொடுப்பதாகவும் தெரிவித்தனர்.

☞ ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறி

மேற்படி பயிற்சி நெறியை வலயங்கள் ரீதியாக நடாத்துவது தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டதுடன் இதற்கு தேவையான வளவாளர்களை தென்பகுதியிலிருந்து தெரிவு செய்யும் படியும் கௌரவ அமைச்சர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

☞ தளபாடக் கொள்வனவு:-

தரம் 4 மற்றும் 5 ஆம் தரத்திற்கான தளபாடங்களையும் 10 ஆம் 11 ஆம் தரங்களுக்கான தளபாடங்களையும் தரமான முறையில் வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.வலயக்கல்வி அலுவலகங்கள் தமக்கு தேவையான அளவுள்ள தளபாடங்களுக்கான எண்ணிக்கையைத் தரும்படி தெரிவிக்கப்பட்டது.

☞ பாடசாலைகளுக்குத் தேவையான தண்ணீர்வசதிகள் மற்றும் மலசல கூடவசதிகளை ஏற்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி தொடர்பான விபரங்கள் ஒவ்வொரு பாடசாலைக்கும் தனித்தனியாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

☞ விளையாட்டு உபகரணங்கள்

விளையாட்டு உபகரணங்களுக்காக ரூபா 725,000 ஒதுக்கப்பட்டுள்ளதால் தேவையான பாடசாலைகளுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அதனை ஒரே தடவையில் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறும் ஆரம்பபிரிவு பிரதிக் கல்விப்பணிப்பாளரிடம் தெரிவிக்கப்பட்டது. அதற்கான நிதியினை அதிபர்களுக்கு நேரடியாக பாடசாலைக்கு அனுப்புவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டது.பாடசாலை அதிபர்களால் தேவையான மதிப்பீட்டை தயாரித்து வழங்கும் பட்சத்தில் அதற்கான பணத்தினை வழங்கும்படியும் இதனை தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மேற்பார்வை செய்ய வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இத்துடன் கூட்டம் பிற்பகல் 2.00 மணிக்கு நிறைவு பெற்றது.

இ.இரவீந்திரன்

செயலாளர்,

இ. இரவீந்திரன்
செயலாளர்
கல்வி,பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை,
மற்றும் இளைஞர் விவகார அமைச்சு
வட மாகாணம்